*கவனிக்க.- 2024.01.12 ஆந் திகதிய 2367 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) மற்றும் பகுதி IV (அ) (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2368 - 2024 ජනවාරි මස 19 වැනි සිකුරාදා - 2024.01.19

*2368 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | *18* |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | *19* |

| | பக்கம் |
|---|---|
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, சனவரி மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


17 - B82534 - 5,403(2024/01)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## சப்பிரகமுவ மாகாண சபை

*சப்பிரகமுவ மாகாண சபையின் 2007 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் நியதிச் சட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கங்களை இரத்து செய்து மூடுதல்.*

*கீழ்க் குறிப்பிட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றுக்கு நேர் எதிரே காட்டப்பட்டுள்ள திகதி தொடக்கம் இரத்துச் செய்து முடிவடைய செய்யப்பட்டுள்ளது என்பதை சப்பிரகமுவ மாகாண சபையின் 2007 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 57(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்துக்கொள்கிறேன்.*

டப்ளியூ. ஜீ. நிசாந்த சமன் குமார,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்,
சப்பிரகமுவ மாகாணம்.

| அனு இல. | சங்கத்தின் பெயர் | முகவரி | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி | முடிவு செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | வரையறுக்கப்பட்ட எஹலியகொடை கால்நடை மருத்துவர் கூட்டுறவுச் சங்கம் | எஹலியகொடை | சம/எஹ/கூட்/01/92 | 1992.12.19 | 2023.11.30 |
| 02 | வரையறுக்கப்படாத கொஸ்கல சனச சங்கம் | கொஸ்கல | R/948 | 1991.10.11 | 2023.11.30 |
| 03 | வரையறுக்கப்பட்ட மின்னேரிபிடிய இனிப்புக்கள் தயாரிக்கும் கிராமம் கூட்டுறவு சங்கம் | மின்னேரிபிடிய, பரகடுவ | ர/1193 | 2005.04.04 | 2023.11.30 |
| 04 | வரையறுக்கப்படாத குடவ சனச சங்கம் | குடவ | ர/1114 | 1996.10.18 | 2023.11.30 |
| 05 | வரையறுக்கப்படாத புலத்வெல்கந்த சனச சங்கம் | புலத்வெல்கந்த, பனாமுர | ர/1127 | 1990.10.25 | 2023.11.30 |
| 06 | வரையறுக்கப்பட்ட குடாவ சனச சங்கம் | குடாவ இரத்தினபுரி | ர/856 | 1988.07.12 | 2023.11.30 |
| 07 | வரையறுக்கப்படாத கலல் எல்ல சனச சங்கம் | கலல்எல்ல, அடகலம்பன்ன | ர/676 | 1986.01.19 | 2023.11.30 |

01-171

---

# பதவி வெற்றிடங்கள்

## மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் மாகாணப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தற்போது அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் I ஐச் சேர்ந்த தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள் :**

I. மிருக வைத்திய விஞ்ஞானம் தொடர்பான பட்டத்துடன் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் I இல் 3 வருட முனைப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்கும் உத்தியோகத்தராக இருத்தல்.

II. தற்போது அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் வயது எல்லை ஏற்புடையதன்று.

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் பூரத்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல்.

02. **ஆட்சேர்ப்பு முறை :**

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் I ஐச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுள், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில், மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர் இவ்வெற்றிடப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்.
(அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டம் www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

குறிப்பு : தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

03. **விண்ணப்பிக்கும் முறை :**

முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **2024.02.02** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரினூடாக (மாகாண சபையிற்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன்) **"செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்"** எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் மற்றும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.
(மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.)

04. இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

05. இதன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

குமுதினி எஸ். பிரேமசந்திர,
செயலாளர்,
மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
அலுவலகம்,
2024, சனவரி 10.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர்
பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி : ..........................................................................
2. I. தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................
   II. சேவை மற்றும் தரம் : ..........................................................................
   III. தற்போதைய சேவை நிலையமும் முகவரியும் : ..........................................................................
   ..........................................................................
3. சுய முகவரி : ..........................................................................
4. பால் : ..........................................................................
5. I. பிறந்த திகதி : ..........................................................................
   II. 2024.02.02 ஆந் திகதியன்று வயது : ..........................................................................
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

7. தொலைபேசி இலக்கம் I. பிரத்தியேக : ................................ II. உத்தியோபூர்வ : ..............................

8. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் I இல் பதவியுயர்வு பெற்ற திகதி : ................................

9. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு (2024.02.02) தரம் I இல் முனைப்பான சேவைக்காலம்:
   வருடங்கள் .................. மாதங்கள் .............................. நாட்கள் ..............................

10. பதவியுடன் தொடர்புடைய துறைசார் கல்வித் தகைமைகள்:

| தொடர் இல. | கலாநிதிப் பட்டம் / முதுமாணிப் பட்டம் / பட்டப்பின் டிப்ளோமா | வழங்கிய நிறுவனம் | வருடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11. அரசாங்க சேவையில் முதல் நியமனம் முதல் 2024/.../... ஆந் திகதி வரையிலான சேவைக் கால விபரங்கள் :

| நிறுவனம் | வகித்த பதவி | காலம் | |
|---|---|---|---|
| | | முதல் | வரை |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

12. வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடுகள் :

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலத்தில் பெற்றுள்ள செயலாற்றுகை மட்டம் தொடர்பான விபரங்கள் (பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும்)

| ஆண்டு | பெற்றுள்ள செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 2019 | மிகவும் சிறந்தது /சராசரியிலும் கூடியது /திருப்திகரமானது |
| 2020 | மிகவும் சிறந்தது /சராசரியிலும் கூடியது /திருப்திகரமானது |
| 2021 | மிகவும் சிறந்தது /சராசரியிலும் கூடியது /திருப்திகரமானது |
| 2022 | மிகவும் சிறந்தது /சராசரியிலும் கூடியது /திருப்திகரமானது |
| 2023 | மிகவும் சிறந்தது /சராசரியிலும் கூடியது /திருப்திகரமானது |

13. ஏனைய தகைமைகள் :

I. விருதுகள்

(இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி வழங்கற் திட்டத்தின் 02.5.1 இல் குறிப்பிட்டுள்ளவாறு)

| தொடர் இல. | வெற்றிகள் தொடர்பான விபரங்கள் (எவ்விடயம் தொடர்பில்) | மாகாண தேசிய /சர்வதேச ரீதியில் பெறப்பட்ட வெற்றிகள் தொடர்பில் | வழங்கிய நிறுவனம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

II. பெற்றுள்ள பாராட்டுக்கள் (Commendations)
("பொது 230 ஆ" மாதிரிப்படிவத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாராட்டுக்களுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்)

| பெற்றுள்ள பாராட்டுக்கள் | பாராட்டு பெறப்பட்டது | | எந்த துறையில் செய்யப்பட்ட விடயம் காரணமாக இப்பாராட்டு பெறப்பட்டது |
|---|---|---|---|
| | யாரிடமிருந்து | வருடம் | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

III. வெளியீடுகள்:
(இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்தின் 02.5.3/02.5.4 இல் குறிப்பிட்டுள்ள வெளியீடுகள் தொடர்பான விபரம்)

| வெளியீடுகள் | உரிய பிரிவு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துவதுடன், எனக்கெதிராக தற்போது எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகள் இல்லையெனவும், விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருடகாலப்பகுதியில் தாபனக் கோவையின் தொகுதி II இன் அட்டவணை I அல்லது II இல் குறிப்பிட்டுள்ள தவறுகள், தண்டனைகளுக்கு ஆளாகவில்லையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ........................ ................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**திணைக்களத் தலைவரின் பரிந்துரை**

திரு./ திருமதி / செல்வி ......................................................................................ஆல் வழங்கப்பட்டுள்ள மேற் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அவரது ஆள்சார்புக் கோவையுடன் பரீட்சிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதுடன், அவர் 2024/....../...... ஆந் திகதிக்கு உடன் முந்திய 05 வருடத்தினுள் பெற வேண்டிய அனைத்து சம்பள ஏற்றங்களையும் ஈட்டியுள்ளார் எனவும் இவ்வலுவலருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், எதிர் காலத்தில் அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கவில்லை எனவும் சான்று பகர்கிறேன். இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க இணங்குகிறேன்.

................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
பெயர் :
திகதி : ..................... உத்தியோகபூர்வ முத்திரை :

**அமைச்சின் செயலாளரின் பரிந்துரை**

உரிய விண்ணப்பப்படிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன் /பரிந்துரைக்கவில்லை.

................................................
அமைச்சுச் செயலாளரின் கையொப்பம்
பெயர் :

திகதி : ........................ உத்தியோகபூர்வ முத்திரை :

**மாகாண பிரதான செயலாளரின் பரிந்துரை : (மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு மாத்திரம்)**

உரிய விண்ணப்பப்படிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன் /பரிந்துரைக்கவில்லை.

................................................
மாகாண பிரதான செயலாளரின் கையொப்பம்
பெயர் :

திகதி : ........................ உத்தியோகபூர்வ முத்திரை :

*01-23*